**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.133/2021 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.5 |
| Name : | திரு.ராம்குமார் |
| Father's/Husband Name: | திரு.ராஜசேகர் |
| Village : | தனிப்பிரிவு மாவட்ட காவல் அலுவலகம் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 36/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 01.06.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

(**எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை**

நான் தற்போது தனிப்பிரிவு உதவி ஆய்வாளராக பெரம்பலூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.03.2020ம் தேதி சுமார் 12.00 மணிக்கு மருவத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது தர்மலிங்கம் மனைவி சின்னப்பிள்ளை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் மனு எண் 54/2020 கொடுக்கப்பட்டது. விசாரைணக்கு பின்னும் மருவத்தூர் காவல் நிலைய குற்ற எண் 38/2020 இதச பிரிவுகள் 294(b), 355 ன்படி மற்றும் 4 of TNPHW Act ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கின் அசல் புகாரோடு முதல் தகவல் அறிக்கையை கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கில் புகார் கொடுத்த சின்னப்பிள்ளை என்பவர் இறந்துவிட்டார். அவருடைய இறப்பு குறித்து கொளத்தூர் கிழக்கு கிராமம் , ஆலத்தூர் வட்டம் கிராம நிர்வாக அலுவலகர் கமலக்கண்ணன் அவர்கள் சின்னப்பிள்ளை இறப்பு குறித்து சான்றிதழ்

வழங்கியுள்ளார். அதனை பெற்று காவல் துறையினர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். **புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சின்னப்பிள்ளையின் இறப்பு குறித்த கிராம நிர்வாக அலுவலகரின் சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அன்றைய தினமே வழக்கு கோப்பினை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு மதியம் சுமார் 11.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் சகாதேவன், சுந்தரம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவை **முறையே பார்வை மகஜர் அ.சா.ஆ4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் சாட்சிகள் சின்னப்பிள்ளை, குமார், மகாலட்சுமி, பாப்பாத்தி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். இந்த வழக்கின் விசாரணையில் எதிரி கற்பகவள்ளி என்பவரை கைதிற்கான காரணம் கூறி கைது செய்து இரண்டு ஜாமீன்தார் முன்னிலையில் நிலையப்பிணையில் விடுவித்தேன். என்னுடைய புலன் விசாரணையில் வழக்கின் எதிரியாக கருதப்பட்ட ஆனந்தன் மற்றும் திருமலைவாசன் என்பவர்களை வழக்கிலிருந்து எதிரிகளை நீக்கல் செய்து இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவுகள் 294(b), 355 ன்படி மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். மேற்படி **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை மற்றும் எதிரி நீக்கல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

இறுதியாக புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 355 ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த தேதி என்ன என்றால் 09.03.2020 . எந்த தேதியில் புகாரை பெற்றேன் என்றால் 03.03.2020ம் தேதி. இப்புகாருக்கு CSR ரசீது கொடுத்த பிறகு 6 நாட்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன் என்றால் சரிதான். எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், இவ்வழக்கின் புகார்தாரர் எதிரியின் மாமியார் என்பதால் கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.